2. தகவல் கோரல்.

(அ) பேரவைத் தலைவரின் தீர்ப்பை விமர்சிக்கும் வகையில் மதுராந்தகம் நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி உள்ளதாகக் கூறப்பெறுவது குறித்து.

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், நகர மன்றங்கள் ஏதாவது தீர்மானத்தை போட வேண்டுமென்று சொன்னால் அதற்கு ஒரு எல்லை உண்டு. அந்த வரையறைக்குட்பட்டு தான் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட வேண்டும். இதற்கு மாறாக மன்றத்திலே நடந்த நிகழ்ச்சி யைப் பற்றி, குறிப்பாக நீங்கள் அளித்த தீர்ப்பை விமர்சிக்கின்ற வகையிலே அந்த படங்களையெல்லாம் வெளியிட வேண் டும் என்று மதுராந்தகம் நகராட்சியிலே ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. அது ஒரு உரிமை மீறல் செயல் ஆகும். இதை உரிமை மீறல் குழுவிற்கு விட்டு விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்பினால், நான் அவர் களுக்கு முறைப்படி எழுதிக் கேட்டுப் பிறகு என் கருத்தைச் சொல்வேன்.

(ஆ) சென்னை அபிராமபுரம் பகுதியில் பாதாள சாக்கடை சுத்தம் செய்யும் போது இறந்த ஊழியர் குடும்பத்திற்கு நிதியுதவி.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் வெளி வந்திருக்கக் கூடிய ஒரு வேதனைத் தரத்தக்க நிகழ்ச்சியை இங்கே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சென்னை அபிராமபுரம் பகுதி யிலே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் கழிவுநீர் அகற்றும் வாரி யத்தை சேர்ந்திருக்கக் கூடிய அலுவலக ஊழியர் ஒருவர், திரு. ஏழுமலை என்பது அவருடைய பெயர், அங்கே பாதாள சாக்கடையிலே அடைப்பு ஏற்பட்டு, அதை நீக்குவதற்காக உள்ளே சென்றவர் அங்கே விஷவாயுப் புகையால் தாக்கப்பட்டு உள்ளேயே மயங்கி விழுந்து மரணம் அடைந்திருக்கிறார்.

அவரது உடலை வெளியே எடுக்கக்கூட மிக அரும்பாடுபட்டு வெளியே எடுத்திருக்கிறார்கள். இதுபோல பாதாள சாக்கடை யிலே இறங்குகிற துப்புரவு ஊழியர் இறக்கிற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகிறது. இதைத் தடுக்க, பாதாள சாக்கடையிலே இறங்கி சுத்தம் செய்யும் பணியை இயந்திர மயமாக்குகின்ற கோரிக்கையை விடுப்பதோடு, அப்படி செய்தால் தான் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கலாம் என்பதால் இதற்கு ஓர் உத்தரவாதம் தர வேண்டு மென்பதோடு இறந்திருக்கின்ற ஊழியருடைய குடும்பத்தினருக்கு போதுமான நிவாரண தொகையை அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

1989 ஏப்ரல், 25]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை உணர்ந்து இதைப் போன்ற சாக்கடைகளை சீர் செய்ய இயந்திர மயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து நான் முன்பே வினாவிற்குப் பதிலளிக்கும்போது சொல்லியிருக்கிறேன். இங்கிலாந்திலிருந்து நவீனக் கருவிகள் வரவழைக்கப்பட்டு இப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. இறந்துபோன துப்புரவு ஊழியர் ஏழுமலையின் குடும்பம் குறித்து இந்த அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்கிறது. ஆனால் அவர் அங்கே தற்காலிகமாகப் பணியாற்றியவர். அந்த அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட இந்த சோக நிகழ்ச்சியைக் கருதி வாரியம் அவருடைய குடும்பத்திற்கு உடனடியாக ரூபாய் ஆயிரம் கொடுத்திருக்கிறது. ஆனால் இருக்கிற சங்கடம் அவர் நிரந்தர ஊழியர் அல்ல, தற்காலிக ஊழியர். நிரந்தர ஊழியருக்கு வழங்குவது போல இவருக்கும் 20 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அவருடைய குடும்பத்தினர் சார்பில் கேட்டிருக்கிறார்கள். ஆனால் வாரியம் தான் இது குறித்து முடிவு செய்யும். வாரியம் முடிவு செய்ததற்குப் பிறகு அரசுக்கு அனுப்பினால் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து அது குறித்து அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) திருப்பத்தூர்த் தொகுதியில் சில பகுதிகளில் ஏற்பட்ட நிலநடுக்கம் குறித்து.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23—4—1989 ஞாயிற்றுக்கிழமை அன்று என்னுடைய தொகுதியான திருப்பத்தூரில் நில நடுக்கம் ஏற்பட்டது. திருப்பத்தூர் நகரில் மட்டுமல்லாமல் ஜவ்வாது மலை, ஏலகிரி அடிவாரம் மற்றும் அங்கிருக்கிற கிராமங்களில் எல்லாம் நில நடுக்கம் ஏற்பட்டதால் அந்தப் பகுதிகளிலுள்ள கட்டிடங்கள் எல்லாம் இடிபாடுகளுக்கு ஆளாகியிருக்கின்றன. ஏற்கெனவே 2 ஆண்டுகளுக்கு முன்பு கூட இதுபோன்ற நில நடுக்கம் ஏற்பட்டது. இதை முன்கூட்டியே இனிமேல் மக்களுக்கு தெரியப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில நடுக்கங்கள் பல இடங்களில் ஏற்படுகின்றன. ஆனால் இதுவரையில் முன்கூட்டியே அறிவிக்கின்ற எந்த ஒரு நிலையிலும் எந்த ஓர் அரசும் அப்படி இதுவரையில் செய்ததாகத் தெரியவில்லை. எனவே அப்படி வேறு யாராவது முன்கூட்டியே அறிவிக்கின்ற சாதனங்களைப் பெற்று அறிவிக்கின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் அதைத் தமிழக அரசும் பெற்று அறிவிக்கின்ற சூழ்நிலை நிச்சயமாக உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.